**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, தஞ்சாவூர்.**

**முன்னிலை: செல்வி. S. T. கனிமொழி, L.L.M.,**

**நீதித்துறை நடுவர் எண்.I, தஞ்சாவூர்.**

2026 ம் ஆண்டு மார்ச் 12-ம் நாள் வியாழன் கிழமை

2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் மாசித் திங்கள் 28 ம் நாள்

**சிசி எண்.33/2025**

CNR NO.TNTJ05-006125-2024

அரசுக்காக, காவல் ஆய்வாளர்,
தஞ்சாவூர் PEW காவல்நிலையம்,
குற்ற எண்.562/2024. ....குற்றமுறையீட்டாளர்

//எதிர்//

ஆனந்த், வயது 29/2026, த/பெ. ராஜேந்திரன்,
எண்.225, ருக்மணியம்மாள் மடம், பாலோபநந்தவனம்,
கீழவாசல், தஞ்சாவூர். ...எதிரி

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 19.02.2025 அன்று சிசி.எண். 33/2025 என கோப்புக்கு எடுக்கப்பட்டு, 11.03.2026 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு கொண்டுவரப்பட்டதில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. அ. ராஜேஷ்கண்ணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....,

## தீர்ப்புரை

### I. குற்ற அறிக்கையின் சுருக்கம்-

கடந்த 30.07.2024 ம் தேதி காலை 07.45 மணிக்கு தஞ்சாவூர் கீழவாசல் CRC டிப்போ அருகில் இவ்வழக்கின் எதிரி ஆனந்த் 180 ML அளவுள்ள Vorion பிராந்தி

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.12 12:38:23 +0000

பாட்டில்கள் 26-பாட்டில்களை எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இன்றி லாபநோக்கத்தில் விற்பனை செய்து ரூ.200/- பணம் பெற்றுக்கொண்டிருந்து குற்றம் புரிந்துள்ளதாக தெரிவித்து, தஞ்சாவூர் PEW காவல்நிலைய காவல் ஆய்வாளர் எதிரி மீது சட்டப்பிரிவு. 4 (1) (A), 4 (1) (C) TNP Act (New Amendment Act 2024)ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

II. இந்நிலையில் இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் BNS பிரிவு 230-ன் கீழ் ஆவணங்களின் நகல் இலவசமாக வழங்கப்பட்டு, பின்னர் இவ்வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், பார்வையிட்டும், எதிரி மீது சட்டப்பிரிவு. 4 (1) (A), 4 (1) (C) TNP Act (New Amendment Act 2024)ன் படியான குற்றச்சாட்டு வனையப்பட்டு, குற்றச்சாட்டை விளக்கிக் கூறி வினவிய போது எதிரி மேற்படி குற்றங்களை மறுத்து குற்றவாளி இல்லை என்றார். எனவே அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

III. இவ்வழக்கில் அரசு தரப்பில் அசா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அசாஆ.1 முதல் அசாஆ.9 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

IV. **விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் யாதெனில்,**

IV.1) அரசு தரப்பில் கடந்த 30.07.2024 ம் தேதி காலை 07.45 மணிக்கு தஞ்சாவூர் கீழவாசல் CRC டிப்போ அருகில் இவ்வழக்கின் எதிரி ஆனந்த் 180 ML அளவுள்ள Vorion பிராந்தி பாட்டில்கள் 26-பாட்டில்களை எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.03.12 12:38:30 +0000

இன்றி லாபநோக்கத்தில் விற்பனை செய்து ரூ.200/- பணம் பெற்றுக்கொண்டிருந்து குற்றம் புரிந்துள்ளதாக தெரிவித்து, தஞ்சாவூர் PEW காவல்நிலைய காவல் ஆய்வாளர் எதிரி மீது சட்டப்பிரிவு. 4 (1) (A), 4 (1) (C) TNP Act (New Amendment Act 2024)**ன் கீழ்** குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் காவல்துறை அதிகாரிகள் அசா.1 முதல் 3 சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

V. இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இவ்வழக்கின் எதிரியை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரியிடம் BNS பிரிவு 351(1)(ஆ)ன் படி வினவியபோது போது எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் தெரிவித்தார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

VI. **இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால், எதிரி மீது சட்டப்பிரிவு.** 4 (1) (A), 4 (1) (C) TNP Act (New Amendment Act 2024)**ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

1. அரசு தரப்பில் அசா.1 முதல் 3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அசாஆ.1 முதல் அசாஆ.9 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, அரசு தரப்பு வழக்கினை நிரூபித்துவிட்டதாக வாதம் முன்வைக்கப்பட்டது. அதே வேளையில் குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் இந்த வழக்கின் தனிப்பட்ட சாட்சிகள் யாரும் இல்லையென்றும், காவல்துறை அதிகாரிகளே எதிரிக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், எனவே தனிப்பட்ட சாட்சிகள் யாரும் அரசு தரப்பிற்கு

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.12 12:38:38 +0000

ஆதரவாக குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது குற்ற கூறுகள் உள்ளவாறு சாட்சியம் அளிக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் தரப்பில் வாதம் முன் வைக்கப்பட்டு, எதிரியை விடுதலை செய்யவேண்டுமென வாதிட்டார்.

2. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

3. வழக்கின் சம்பவம் குறித்து கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அசா.1 தன்னுடைய சாட்சியத்தில் "கடந்த 30.07.2024 ம் தேதி காலை 7.45 மணிக்கு தஞ்சை மதுவிலக்கு அமல் பிரிவு காவல் ஆய்வாளருடன் தானும் நிலைய தலைமை காவலரும் ரோந்து பணியில் கண்காணித்து அவருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் தஞ்சை கீழவாசல் தெருவில் பின்னால் பெயர் கேட்டு தெரிந்த ஆனந்த் என்பவர் தஞ்சை CRC டெப்போ அருகில் கையில் வெள்ளை நிற சாக்குபையுடன் இருந்தவரை போலீசார் தங்களை கண்டதும் தப்பிக்க எத்தனித்தவரை மடக்கி பிடித்து, அவர் கையில் வைத்திருந்த வெள்ளைநிற சாக்குபையில் எவ்வித அரசு அனுமதியோ, உரிமையோ இன்றி விற்பனை செய்தற்காக 180 மிலி அளவுள்ள Vorion பிராந்தி 26 பாட்டில்களுடன் மற்றும் மதுவிற்பனை செய்த பணம் ரூ. 200/- வைத்திருந்ததாகவும், எதிரியை 7.45 மணிக்கு குற்ற காரணம் கூறி கைது செய்தும், அதே இடத்தில் தனிநபர்கள் யாரும் சாட்சி சொல்ல முன்வராதாதல் தங்கள் முன்னிலையில் அவரை விசாரிக்க 7.50 மணிக்கு அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், அதே வாக்குமூலத்தில் தானும், தலைமை காவலரும் கையொப்பம் செய்ததாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில்

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.12 12:38:44 +0000

எதிரி ஆஜர் செய்த வெள்ளைநிற சாக்கு பையுடன் கூடிய பிராந்தி பாட்டில்களை 26 யும் விற்பனை பணம் ரூ. 200/- 8.45 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி 32 TNP Act தடயத்தை சாட்சிகள் முன்னிலையில் கொட்டி அளித்தும், எதிரி மற்றும் விற்பனை பணம் ரூ.200/- 9.30 மணிக்கு நிலையம் வந்து மதுவிலக்கு அமல்பிரிவு குற்ற எண் 562/2024 சட்டபிரிவு 4(1)(c),4(1)(A) TNP Act ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும், எதிரியை திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்படைத்ததாகவும்" சாட்சியம் அளித்துள்ளார்.

4. அடுத்தபடியாக மற்றொரு கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அசா.2 தன்னுடைய சாட்சியத்தில் "கடந்த 30.07.2024 ம் தேதி காலை 7.45 மணிக்கு தஞ்சை மதுவிலக்கு அமல் பிரிவு காவல் ஆய்வாளருடன் தானும் முதல் நிலைய காவலருன் ரோந்து பணியில் கண்காணித்து அவருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் தஞ்சை கீழவாசல் தெருவில் பின்னால் பெயர் கேட்டு தெரிந்த ஆனந்த் என்பவர் தஞ்சை CRC டெப்போ அருகில் கையில் வெள்ளை நிற சாக்குபையுடன் இருந்தவர் தங்களை கண்டதும் தப்பிக்க எத்தனித்தவரை மடக்கி பிடித்து, அவர் கையில் வைத்திருந்த வெள்ளைநிற சாக்குபையில் எவ்வித அரசு அனுமதியோ, உரிமையோ இன்றி விற்பனை செய்தற்காக 180 மிலி அளவுள்ள Vorion பிராந்தி பாட்டில் 26 பாட்டில்களுடன் மற்றும் மதுவிற்பனை செய்த பணம் ரூ.200/- வைத்திருந்ததாகவும், எதிரியை 7.45 மணிக்கு குற்ற காரணம் கூறி கைது செய்தும், அதே இடத்தில் தனிநபர்கள் யாரும் சாட்சி சொல்ல முன்வராதாதல் தங்கள் முன்னிலையில் அவரை விசாரிக்க 7.50 மணிக்கு அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல்

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.03.12 12:38:50 +0000

வாக்குமூலத்தை பதிவு செய்தும், அதே வாக்குமூலத்தை தானும், முதல் நிலை காவலரும் கையொப்பம் செய்ததாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ஆஜர் செய்த வெள்ளைநிற சாக்கு பையுடன் கூடிய பிராந்தி பாட்டில்களை 26 யும் விற்பனை பணம் ரூ.200/- 8.45 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி 32 TNP Act தடயத்தை சாட்சிகள் முன்னிலையில் கொட்டி அளித்தும், எதிரி மற்றும் விற்பனை பணம் ரூ.200/-ஐ 9.30 மணிக்கு நிலையம் வந்து மதுவிலக்கு அமல்பிரிவு குற்ற எண் 562/2024 சட்டபிரிவு 4(1)(c),4(1)(A) TNP Act ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும், எதிரியை திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்படைத்ததாகவும்" சாட்சியம் அளித்துள்ளார்.

5. இந்நிலையில் அசா.1, 2 தங்களது குறுக்கு விசாரணையில் "சம்பவயிடமானது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றும், கடைகள் அதிகம் உள்ள பகுதி என்றும், தாங்கள் அருகில் உள்ள நபர்களை சாட்சியாக இருக்கும்படி அழைக்கவில்லை என்றும், கைப்பற்றுதல் மகசரில் எதிரியிடமிருந்து எந்த கையொப்பமும் பெறவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார்கள். அசா.1, 2 ன் சாட்சியத்திலிருந்து சம்பவயிடம் கடைகள் உள்ள பகுதி என்பதும், பொதுமக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதி என்பதும் தெரியவருகிறது. ஆனால் இவ்வழக்கில் சம்பவயிடத்தில் இருந்த பொதுமக்களில் யாரும் தனிநபர் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை என்பது புலனாகிறது. மேலும் எதிரியிடமிருந்து தடயப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில், கைப்பற்றுதல் மகசரில் எதிரியின் கையொப்பம் இல்லாதது அரசு தரப்பு வழக்கை சந்தேகிக்கச் செய்கிறது.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.12 12:38:56 +0000

6. அடுத்தபடியாக புலன் விசாரணை அதிகாரி அ.சா.3 தன்னுடைய முதல் விசாரணையில் "கடந்த 30.07.2024ம் தேதி காலை 7.45 மணிக்கு நிலைய காவலர்களுடன் கண்காணித்து வந்தபோது தஞ்சை கீழவாசல் CRC டெப்போ அருகில் பின்னால் பெயர் கேட்டு தெரிந்த ஆனந்த் என்பவர் வெள்ளை நிற சாக்கு பையுடன் உக்கார்ந்து இருந்தவர், தங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை வளைத்து பிடித்து பார்க்க அதில் எவ்வித அனுமதியோ உரிமமோ இன்றி விற்பனை செய்வதற்காக 180 மிலி அளவு கொண்ட ஓரியன் பிராந்தி பாட்டில்கள் 26, விற்பனை செய்த பணம் ரூ.200/- வைத்திருந்ததாகவும், எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இன்றி வைத்திருந்த மது பாட்டில்களை காரணம் கூறி 7.45 மணிக்கு கைது செய்தும், அதே இடத்தில் தனிநபர் சாட்சிகள் எவரும் முன்வராததால் தன்னுடன் வந்த போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் எவ்வித அச்சுறுதலும், வற்புறுத்தலும் இன்றி விசாரிக்க தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஆஜர் செய்த பிராந்தி பாட்டில்களை பணத்தையும், மகசரில் கைப்பற்றியதாகவும், பின்னர் 32 TNP Actன் படி சம்பவயிடத்தில் கொட்டி அழித்தும், மதுவிற்பனை செய்த பணம் மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து 9.30 மணிக்கு நிலைய குற்ற எண் 562/2024 சட்டபிரிவுகள் 4(1)(c), 4(1)(A) TNP Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாகவும், பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் எதிரியை திரேக பரிசோதனை செய்து தக்க வழிகாட்டுதலுடன் படிவம் 91 மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும், பின்பு 15.11.2024ம் தேதி எதிரி மீது மேற்படி சட்டபிரிவின் கீழ்

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.12 12:39:01 +0000

குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும் " சாட்சியம் அளித்துள்ளார்.

7. மேலும் அசா.3 ன் குறுக்கு விசாரணையில் "சம்பவயிடமானது மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதி என்றும், தனி நபர் சாட்சிகள் எவரையும் விசாரிக்கவில்லை என்றும், தனிநபர்கள் யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை என்றும், கைப்பற்றுதல் மகசரில் வெள்ளை நிற சாக்கு பை குறித்து சொல்லவில்லை என்றும், கைப்பற்றுதல் மகசரில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.3 ன் சாட்சியத்திலிருந்து சம்பவயிடம் கடைகள் உள்ள பகுதி என்பதும், பொதுமக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதி என்பதும் தெரியவருகிறது. ஆனால் இவ்வழக்கில் சம்பவயிடத்தில் இருந்த பொதுமக்களில் யாரும் தனிநபர் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை என்பதும், யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை என்பதும் புலனாகிறது. மேலும் எதிரியிடமிருந்து தடயப்பொருள் வெள்ளைநிற சாக்குபையுடன் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில், அதுகுறித்து கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிடப்படாததும், கைப்பற்றுதல் மகசரில் எதிரியின் கையொப்பம் இல்லாததும் அரசு தரப்பு வழக்கை மேலும் சந்தேகிக்கச் செய்கிறது.

8. இவ்வழக்கில் அசா.1 முதல் 3 சாட்சியங்களின் சாட்சியத்திலிருந்து சம்பவ தேதியான 30.07.2024 அன்று காலை 07.45 மணிக்கு தஞ்சாவூர் கீழவாசல் சி.ஆர்.சி டெப்போ அருகில் எதிரி எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இன்றி சுமார் 180 ML அளவுள்ள Vorion பிராந்தியுடன் கூடிய பாட்டில்கள் 26-ஐ விற்பனைக்காக வைத்திருந்தார் என நிரூபிக்க அப்பகுதியில் இருந்த பொதுமக்களில் ஒரு தனிப்பட்ட

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.12 12:39:06 +0000

சாட்சிகள் கூட விசாரிக்கப்படவில்லை. மேலும் தடயப்பொருள் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ள நிலையில், கைப்பற்றுதல் மகசரில் எதிரியின் கையொப்பம் இல்லாதது அரசு தரப்பு வழக்கை சந்தேகிக்கச் செய்கிறது. இந்நிலையில் காவலர்களின் சாட்சியம் மட்டுமே குற்றம்சாட்டப்பட்டவருக்கு தண்டனை பெற்றுத்தர போதுமான சாட்சியாக அமையவில்லை. ஆகவே அரசு தரப்பு வழக்கை போதிய சாட்சியத்தின் அடிப்படையில் அரசு நிரூபிக்க தவறிவிட்டமையால் சந்தேகத்தின் பலனை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அளித்து குற்றஞ்சாட்டப்பட்டவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. இவ்வழக்கில் அ.சா.1 முதல் 3 சாட்சியங்கள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அசாஆ.9 சான்றாவணங்கள் படியாக எதிரி மீது சட்டப்பிரிவு. 4 (1) (A), 4 (1) (C) TNP Act (New Amendment Act 2024)ன் கீழான குற்றத்தினை அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

VII. இறுதியாக சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரி மீது சட்டப்பிரிவு.4 (1) (A), 4 (1) (C) TNP Act (New Amendment Act 2024)ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து, எதிரியை BNS பிரிவு 271(1)-ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

10. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தடயப்பொருளான ரூ.200/-ஐ அரசுக்கு ஆதாயப்படுத்த உத்தரவிடப்படுகிறது. (சிபி எண்.237/2024)

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.12 12:39:11 +0000

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ம் நாள் என்னால் இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.03.12 12:39:18 +0000

நீதித்துறை நடுவர் எண்.I

தஞ்சாவூர்.

**அரசு தரப்பு விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:**

அ.சா.1 -- திரு. கணேஷ்பிரபு (தலைமை காவலர்)

அ.சா.2 -- திரு. முத்து (சிறப்பு உதவி ஆய்வாளர்)

அ.சா.3 -- திருமதி. பகவதி சரணம் (காவல் ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 30.07.2024 | ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அசா.1 ன் முதலாவது சாட்சி கையொப்பம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 30.07.2024 | கைப்பற்றுதல் மகசரிலுள்ள அசா.1 ன் முதலாவது சாட்சி கையொப்பம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.3 | 30.07.2024 | ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அசா.2 ன் இரண்டாவது சாட்சி கையொப்பம் | அ.சா.2 |
| அ.சா.ஆ.4 | 30.07.2024 | கைப்பற்றுதல் மகசரிலுள்ள அசா.2 ன் இரண்டாவது சாட்சி கையொப்பம் | அ.சா.2 |
| அ.சா.ஆ.5 | 30.07.2024 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.6 | 30.07.2024 | ஒப்புதல் வாக்குமூலம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.7 | 30.07.2024 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.3 |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.8 | 30.07.2024 | அழித்தல் மகசர் | அ.சா.3 |
| அ.சா.ஆ.9 | 30.07.2024 | படிவம் - 91(சிபி எண்.237/2024) | அ.சா.3 |

**அரசு தரப்பு சான்றுப்பொருள்**:-

1) ரூ.200/-ஐ பணம்

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.03.12 12:39:23 +0000

நீதித்துறை நடுவர் எண்.I

தஞ்சாவூர்.

**குறிப்பு:**

1) வழக்கு விசாரணையின் போது எதிரி ஜாமீனில் இருந்தார்.

2) எந்த ஒரு சாட்சியையும் விசாரணைக்காக மூன்று வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கு முடிவு காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.